**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**தேதி: 19.02.2026**
**OS. No.61/2023**
**வழக்கு சாட்சி PW.1–பாலசுப்பிரமணி, த/பெ. பழனிச்சாமி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தாவா சொத்து அடி விபரம் தெரியாது , அது 2 சென்ட் நிலமாகும். 2 சென்ட் நிலம் என்றால் தோராயமாக 900 சதுரடி அளவில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டின் 13 அடி நீளம் , 11 அடி அகலம் ஆகும். நான் வீடு கட்டியது போக மீத இடம் காலியாக விட்டுள்ளேன். மேற்சொன்ன 2 சென்ட் நிலத்திற்கு என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அதனடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆவணம் அந்த பட்டா ஆவணம் என்றால் சரிதான் . அந்த பட்டா ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பழனிச்சாமி மகன் பாலசுப்பிரமணி நான்தான் என்றால் சரிதான் . வா.சா.ஆ.8 ஆவணத்தின்படி 13 சதுர மீட்டர் நிலம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா இல்லத்தை பார்வையிட்டபோது, பிரதிவாதியோ, பிரதிவாதி வழக்கறிஞரோ அங்கு இல்லை என்றால் சரியல்ல. 13*11 சதுரடி வீடுதான் தாவா இடத்தில் உள்ளது என்றாலும் அதற்கு மாறாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் விபரம் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறான அறிக்கை என்றால் மொத்தம் என் நிலம் 2 சென்ட் நிலமாகும்.

ஆதியில் தாவா சொத்து எனது அப்பா பழனிச்சாமி பெயரில் இருந்தது என்றால் சரிதான். எனக்கு உடன் பிறந்த அண்ணன் மற்றும் 2 அக்காக்கள் உள்ளனர். எனது அப்பாவின் வாரிசுகளிடம் முறையாக விடுதலைப் பத்திரம் பெறாமல் நான் தாவா சொத்து

எனக்கு உடைமையானது என சொல்வது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல . நான் இடத்தை அளக்கச்சொல்லி மனு செய்ததன்பேரில் 13.04.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு குறுவட்ட அளவர் என் இடத்தை அளந்தார் என்றால் சரிதான் . குறுவட்ட அளவர் அளந்து கொடுத்த அறிக்கையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் .

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.19 17:51:32 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.